SUMITOMO MITSUI FINANCIAL GROUP, INC.

2024, மார்ச் 31-ஆம் தேதி முடிவுற்ற ஆண்டிற்கான ஆண்டறிக்கை

இயக்குநர் வாரியம் (ஜூன் 27, 2024 நிலவரப்படி)

வாரியத் தலைவர்
Takeshi Kunibe

இயக்குநர் அதிபர்
Toru Nakashima

இயக்குநர் துணை அதிபர் மற்றும் நிர்வாக அதிகாரி
Teiko Kudo

இயக்குநர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள்

Fumihiko Ito	Yoshinobu Tsutsui	Muneo Kanamaru	Takeshi Mikami
Toshihiro Isshiki	Katsuyoshi Shinbo	Masamichi Koike	Keiichiro Nakamura
Yoshiyuki Gono	Eriko Sakurai	Takashi Yamashita	Akio Isowa
Shozo Yamazaki	Charles D. Lake II	Jun Uchikawa	Takashi Kobayashi
Sonosuke Kadonaga	Jenifer Rogers	Yoshihiro Hyakutome	Natsuhiro Samejima

முக்கியத் துணை நிறுவனங்கள் (மார்ச் 31, 2024 நிலவரப்படி)

Sumitomo Mitsui Banking Corporation (“SMBC”)
SMBC Trust Bank Ltd.
SMBC Nikko Securities Inc.
Suminomo Mitsui Card Company, Limited
SMBC Finance Service Co., Ltd.
SMBC Consumer Finance Co., Ltd.
The Japan Research Institute, Limited
Sumitomo Mitsui DS Asset Management Company, Limited
SMBC Bank International plc
SMBC Bank EU AG
Sumitomo Mitsui Banking Corporation (China) Limited
PT Bank BTPN Tbk
SMBC Americas Holdings, Inc.
SMBC Guarantee Co., Ltd.

ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருமான அறிக்கை

மார்ச் 31 முடிவுற்ற ஆண்டின் நிலவரப்படி	மில்லியன் கணக்கில் யென் 2023	2024
லாபம்	¥ 816,324	¥ 968,687
இதர விரிவான வருமானம் (நட்டம்)	215,388	1,661,035
இதர பங்குமுதல்களின் கைகூடாத ஆதாயம் (நட்டம்)	(252,078)	1,024,910
இழப்பீட்டுக் காப்பின் தள்ளிவைத்த ஆதாயம் (நட்டம்)	54,055	(49,928)
அந்நிய செலவாணி மாற்றுச் சரியாக்கம்	327,919	502,786
நிர்ணயிக்கப்பட்ட அனுகூலத் திட்டத்தின் மறுகணக்கெடுப்பு	12,078	156,856
இணைநிறுவனங்களின் இதர நிறுவன வருமானத்தில் பகிர்வு	73,412	26,410
மொத்த விரிவான வருமானம்	**1,031,712**	**2,629,723**
மூல நிறுவனத்தின் உரிமையாளர்களுக்குரிய விரிவான வருமானம்	1,019,625	2,621,070
கட்டுப்பாடற்ற பாத்தியதைகளுக்குரிய விரிவான வருமானம்	12,087	8,653

ஒருங்கிணைக்கப்பட்ட நிதியறிக்கைகளுக்கான குறிப்புகள்

பேசல் III அடிப்படையில்	2023	2024
1. படி 1 மூலதன விகிதம்	14.94%	14.33%
ஒருங்கிணைக்கப்பட்ட மூலதன விகிதம்	15.98%	15.29%

2. செயல்பாடு முடக்கம், கலைப்பு, அல்லது இது போன்ற சூழ்நிலைகளில் வைப்புதாரர்களுக்கு பணம் திருப்பித் தரப்படுவதில் ஜப்பானிலுள்ள வைப்புத்தாரர்களைவிட வெளிநாட்டு அலுவலகங்களின் வைப்புத்தாரர்களுக்குக் குறைவான முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென ஜப்பானிலுள்ள எங்களின் தலைமை அலுவலகத்திற்கு எவ்வித நிபந்தனையும் தற்போது கிடையாது.

3. கணக்காய்வு செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்ட அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள குறிப்புகள் நிதி அறிக்கைகளின் முக்கிய பங்காகும். குழுமத்தின் அறிக்கைகள் மற்றும் நிதி நிலையை முழுமையாகப் புரிந்துக்கொள்ள கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை முழுமையாக பரிசீலிக்கவும்.

எங்கள் குழுமத்தின் 2024 ஆண்டு அறிக்கை நகல்களை பெற்றுக்கொள்ள எழுத்து வடிவில் Sumitomo Mitsui Corporation, Singapore Branch, 88 Market Street, #33-01 CapitaSpring, Singapore 048948, என்ற முகவரிக்கு கோரிக்கை விடுக்கவும்

ஒருங்கிணைக்கப்பட்ட வருமான அறிக்கைகள்

மார்ச் 31 முடிவுற்ற ஆண்டின் நிலவரப்படி	மில்லியன் கணக்கில் யென் 2023	2024
சாதாரண வருமானம்	¥ 6,142,155	¥ 9,353,590
வட்டி வருமானம்	3,779,715	6,213,520
கடன், தள்ளுபடிகள் மீதான வட்டி	2,465,859	3,636,796
பத்திரங்கள் மீதான ஈவுத்தொகையும் வட்டியும்	437,385	704,565
உடனடிக் கடன், இரசீது மீதான வட்டி	76,714	207,201
மறுவிற்பனை உடன்பாடுகளின் கீழ் பெறத்தக்கவை மீதான வட்டி பங்குப் பத்திரங்கள் கைமாற்று பட்டுவாடாக்களின்	20,232	119,755
கீழ் பெறத்தக்கவை மீதான வட்டி	34,078	87,502
வங்கி வைப்புகள் மீதான வட்டி	304,299	580,295
குத்தகை பரிவர்த்தனைகள் மீதான வட்டி	8,676	12,483
ஒத்திவைக்கப்பட்ட கட்டணத்திற்கான வட்டி	22,409	21,969
இதர வட்டி வருமானம்	410,058	842,949
அறநிறுவனக் கட்டணம்	6,752	8,195
கட்டணம் மற்றும் தரக்	1,441,313	1,716,335
வர்த்தக வருமானம்	120,727	371,135
இதர நடைமுறை வருமானம்	477,892	609,082
குத்தகை சார்ந்த வருமானம்	39,721	37,436
மற்றவை	438,170	571,645
இதர வருமானம்	315,754	435,320
செலவெழுதிய கோரிக்கை மீட்பு	16,923	16,934
மற்றவை	298,830	418,386
சாதாரண செலவினம்	4,981,224	7,887,462
வட்டி செலவினம்	2,061,922	4,332,866
வைப்புகள் மீதான வட்டி	796,781	1,670,570
பேரவைப்பு சான்றிதழ்கள் மீதான வட்டி	259,422	518,385
அழைப்பு கட்டணம், இரசீது விற்பனை மீதான வட்டி	18,057	43,855
மறுவிற்பனை உடன்பாட்டின்கீழ் செலுத்தத்தக்கவை மீதான வட்டி	275,765	749,371
பத்திரங்கள் கடன் பரிவர்த்தனைகளின் கீழ் செல்துத்தக்கூடிய வட்டி	3,165	15,792
வர்த்தகச் சான்றிதழ் மீதான வட்டி	45,081	116,199
கைமாற்று பணம் மீதான வட்டி	86,175	154,318
குறுகியகால நிதிப் பத்திரக்கை மீதான வட்டி	30	210
நிதிப் பத்திரக்கை மீதான வட்டி	256,862	352,806
இதர வட்டி செலவினம்	320,579	711,354
கட்டணம் மற்றும் தரகு கட்டணங்கள்	222,321	234,305
வர்த்தக் இழப்புகள்	—	263,379
இதர நடைமுறை செலவுகள்	371,925	348,899
குத்தகை சார்ந்த செலவுகள்	31,314	30,915
மற்றவை	340,610	317,984
பொது மற்றும் நிர்வாக செலவுகள்	1,949,245	2,250,593
இதர செலவுகள்	375,809	457,417
உத்தேச கடன் இழப்பிற்கான ஒதுக்கீடு	88,272	118,388
மற்றவை	287,537	339,028
சாதாரண லாபம்	**1,160,930**	**1,466,128**
அசாதாரண லாம்	¥ 3,110	¥ 8,181
நிலைச் சொத்து விற்பனையின் லாபம்	3,110	1,101
எதிர்காலச் செயல்பாட்டிற்கான இருப்புத் தள்ளுபடி நிதிக் கருவிகள் பரிவர்த்தனைகளால் ஏற்படும் இழப்புகள்	0	-
மற்ற அசாதாரண லாபங்கள்	—	7,080
அசாதாரண நட்டம்	65,569	131,959
நிலைச்சொத்து விற்பனை நட்டம்	6,523	9,341
நிலைச்சொத்து சேதாரத்தில் நட்டம்	59,045	13,696
நிதிச் சாதனங்களின் பரிவர்த்தனைகளிலிருந்து எதிர்கால செயல்பாட்டு இழப்புகளுக்கான கையிருப்பு ஒதுக்கீடு	—	729
மற்ற அசாதாரண நட்டங்கள்	—	108,191
வருமான வரிக்கு முந்திய வருமானம்	**1,098,472**	**1,342,349**
வருமான வரி - நடப்பு	222,522	442,736
வருமான வரி - தள்ளிவைப்பு	59,625	(69,073)
வருமான வரி	282,148	373,662
லாபம்	816,324	968,687
கட்டுப்பாடற்ற பாத்தியதைக்குரிய லாபம்	10,481	5,740
மூல நிறுவனத்தின் உரிமாயளர்களுக்குரிய லாபம்	**¥ 805,842**	**¥ 962,946**

ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்புகள்

மார்ச் 31	மில்லியன் கணக்கில் யென் 2023	2024
சொத்துக்கள்		
ரொக்கமும் வங்கியிலிருந்து வரவேண்டியவையும்	¥ 75,913,960	¥ 78,143,100
அழைப்புக் கடன்களும், வாங்கிய இரசீதுகளும்	5,684,812	5,333,883
மறுவிற்பனை உடன்பாட்டின்கீழ் பெறத்தக்கவை	5,785,945	8,525,688
பங்குப் பத்திரங்கள் கைமாற்று பட்டுவாடாக்களின்கீழ் பெறத்தக்கவை	5,576,612	6,799,541
கொள்முதலான நாணய உரிமைப்பங்குகள்	5,558,287	6,103,091
வர்த்தக சொத்துகள்	8,751,204	11,540,063
அறநிறுவனத்திலுள்ள பணம்	12,957	23,751
பத்திரங்கள்	33,213,165	37,142,808
தள்ளுபடியான கடன்கள் மற்றும் இரசீதுகள்	98,404,137	107,013,907
அந்நியச் செலவாணிகள்	1,942,764	2,068,885
வரவேண்டிய குத்தகைகளும் முதலீட்டுச் சொத்துக்களும்	226,302	207,645
இதர சொத்துகள்	13,243,899	15,313,546
உறுதியான நிலையான சொத்துகள்	1,494,527	1,006,883
வாடகைக்குள்ள சொத்துக்கள்	519,308	-
கட்டடங்கள்	323,411	323,967
நிலம்	412,045	405,761
குத்தகை சொத்துகள்	23,317	29,892
கட்டுமாணத்தில் உள்ளவை	30,983	40,894
இதர உறுதியான நிலையான சொத்துகள்	185,460	206,368
உறுதியற்ற நிலையான சொத்துகள்	897,848	976,706
மென்பொருள்	521,545	623,266
நல்லெண்ணம்	277,311	268,833
குத்தகை சொத்துகள்	451	323
இதர உறுதியற்ற நிலையான சொத்துகள்	98,539	84,283
நிகர நிர்ணயிக்கப்பட்ட அனுகூலச் சொத்து	704,654	913,791
தள்ளிவைக்கப்பட்ட வரி சொத்துகள்	74,084	71,427
ஏற்புகள் மற்றும் உத்தரவாதத்திற்கான வாடிக்கையாளர் பொறுப்புகள்	13,693,771	14,869,558
சாத்தியக் கடன் இழப்புகளுக்கான காப்புநிதி	(750,369)	(817,578)
மொத்த சொத்துக்கள்	**¥ 270,428,564**	**¥ 295,236,701**
பொறுப்பகள் மற்றும் நிகர சொத்துகள்		
பொறுப்புகள்		
வைப்புகள்	¥ 158,770,253	¥ 164,839,357
வைப்பு சான்றிதழ்கள்	13,025,555	14,672,275
அழைப்புக் கடனும் விற்கப்பட்ட இரசீதுகளும்	2,569,055	3,138,049
மறுகொள்முதல் உடன்பாட்டின்கீழ் செலுத்தவேண்டியவை	16,772,716	19,625,877
பங்கு பத்திரங்கள் கடன் பட்டுவாடாக்களின்கீழ் செலுத்தவேண்டியவை	1,521,271	1,736,935
வர்த்தக பத்திரங்கள்	2,349,956	2,429,179
வர்த்தக பொறுப்புகள்	8,066,745	9,689,434
கைமாற்றுப் பணம்	13,674,830	14,705,266
அந்நியச் செலவாணி	1,465,847	2,872,560
குறுகியகால பத்திரங்கள்	424,000	863,000
பத்திரங்கள்	10,365,003	13,120,274
அறநிறுவன கணக்குக்கு உரியவை	2,413,464	1,246,198
இதர பொறுப்புகள்	11,923,748	15,573,044
ஊழியர் சன்மானத்திற்கான காப்புநிதி	96,254	115,488
நிர்வாக சன்மானத்திற்கான காப்புநிதி	3,307	4,411
நிகர நிர்ணயிக்கப்பட்ட பொறுப்பு	35,449	37,263
நிர்வாக ஓய்வு நன்மைகளுக்கான காப்புநிதி	1,133	1,179
மையச் சேவை திட்டத்திற்கான காப்புநிதி	28,659	35,622
வைப்புகள் பட்டுவாடாவிற்கான காப்புநிதி	10,845	9,228
வட்டி இழப்பீடுக்கான காப்புநிதி	128,378	121,947
சிறப்புச் சட்டங்களின்கீழான காப்புநிதி	3,902	4,631
தள்ளிவைக்கப்பட்ட வரி பொறுப்புகள்	265,354	698,632
நில மறுமதிப்பீட்டிற்கான தள்ளிவைக்கப்பட்ட வரி பொறுப்புகள்	27,952	27,316
ஏற்புகளும் உத்தரவாதங்களும்	13,693,771	14,869,558
மொத்த பொறுப்புகள்	**¥ 257,637,458**	**¥ 280,436,734**
நிகர சொத்துக்கள்:		
மூலதனப் பங்கு	2,342,537	2,344,038
மூலதன உபரி	694,052	610,143
தக்கவைத்துக்கொள்ளப்பட்ட வருவாய்	7,423,600	7,843,470
கருவூலப் பங்கு	(151,798)	(167,671)
மொத்த பங்குதாரர்களின் பங்கு	**10,308,391**	**10,629,980**
இதர பங்குப்பத்திரங்களின்பேரில் நிகர கைகூடாத லாபம் (நட்டம்)	1,373,521	2,406,883
இழப்பீட்டுக் காப்பின் நிகர ஒத்திவைத்த லாபம் (நட்டம்)	(13,293)	(65,073)
நில மறுமதிப்பு மிகை	35,005	34,936
அந்நியச் செலவாணி மாற்று சரியாக்கம்	843,614	1,362,647
நிர்ணயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களின் கூடிய மறுகணக்கீடு	133,226	290,735
மொத்த விரிவான வருமானம்	**2,372,074**	**4,030,129**
பங்குக் கொள்முதல் உரிமைகள்	1,145	931
கட்டுப்பாட்டில்லா வற்றி	109,495	138,925
மொத்த நிகர சொத்துகள்	**12,791,106**	**14,799,967**
மொத்த பொறுப்புகளும் நிகர சொத்துகளும்	**¥ 270,428,564**	**¥ 295,236,701**

சுயேச்சை கணக்காய்வாளரின் அறிக்கை

சுமிட்டோமோ மிட்சுய் ∴பைனான்ஷியல் குரூப், இன்க்
இயக்குநர் வாரியத்திற்கு;

Takashi Kondo
நியமிக்கப்பட்ட ஈடுபாட்டு பங்குதாரர்
அங்கீகரிக்கப்பட்ட பொது கணக்கர்

Kazuhide Niki
நியமிக்கப்பட்ட ஈடுபாட்டு பங்குதாரர்
அங்கீகரிக்கப்பட்ட பொது கணக்கர்

Bumbee Nishi
நியமிக்கப்பட்ட ஈடுபாட்டு பங்குதாரர்
அங்கீகரிக்கப்பட்ட பொது கணக்கர்

கருத்து

இத்துடன் இணைத்துள்ள சுமிட்டோமோ மிட்சுய் ∴பைனான்ஷியல் குரூப், இன்க், (“நிறுவனம்”) மற்றும் அதன் ஒருங்கிணைந்த துணை நிறுவனங்களின் (கூட்டாக “குழுமம்” எனக் குறிப்பிடப்படுகிறது) ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளை நாங்கள் கணக்காய்வு செய்துள்ளோம். இதில் மார்ச் 31, 2024 மற்றும் 2023 தேதிப்படியான ஒருங்கிணைந்த இருப்புநிலை குறிப்புகள், ஒருங்கிணைந்த வருமான அறிக்கைகள், விரிவான வருமானம், முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிகர சொத்துக்கள் மற்றும் பணப்புழக்க மாற்றங்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் பிற தகவல்கள் அடங்கும்.

எங்கள் கருத்துப்படி, இத்துடன் இணைத்துள்ள ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கையானது, மார்ச் 31 2024 மற்றும் 2023 தேதிப்படியான குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதி நிலைமை மற்றும் முடிவடைந்த ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த நிதிச் செயல்பாடு மற்றும் ஒருங்கிணைந்த பணப்புழக்கங்கள் ஆகியவற்றை ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க அனைத்து முக்கிய விவகாரங்களிலும் நியாயமாக மற்றும் நேர்மையாக விளங்குகிறது.

கருத்திற்கான அடிப்படை

நாங்கள் ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப கணக்காய்வு செய்துள்ளோம். அந்த தரங்களின் கீழ் எங்களது பொறுப்புகள், எங்கள் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள நிதி அறிக்கைகளின் கணக்காய்வில் கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்ற பகுதியில் மேற்கொண்டு விளக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஜப்பானில் அவசியமான நெறிமுறை நிபந்தனைகளின்படி, குழுமத்திற்கு சம்பந்தமில்லாத சுதந்திர அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகளின்படி எங்களது மற்ற நெறிமுறை பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறோம். நாங்கள் பெற்ற கணக்காய்வு ஆதாரங்கள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இதரத் தகவல்கள்

இதரத் தகவல்களில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் அல்லது அதோடு இணைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அதன் மீதான எங்களது கணக்காய்வு அறிக்கை இடம்பெறாது.

மற்ற தகவல்கள் என ஏதுமில்லை என்று நாங்கள் தீர்மானித்துள்ளதால், அத்தகைய தகவல்களை நாங்கள் கணக்காய்வு செய்வதில்லை.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கையில் நிர்வாகம் மற்றும் கணக்காய்வு குழுவின் பொறுப்புகள்

ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு, நியாயமான கருத்தை வெளிப்படுத்தும் வகையில் படைக்கப்படுவதையும், மோசடியோ விவரப் பிழையோ இன்றி தயாரிக்கப்படுவதையும் உறுதி செய்வது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப, தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றலை மதிப்பிட்டு, பொறுத்தமாயின், இது தொடர்பான விவரங்களை வெளியிடுவது நிர்வாகத்தின் பொறுப்பாகும். இயக்குநர்களும் நிறுவன நிர்வாக அதிகாரிகளும் தொகுதியின் நிதி அறிக்கைத் தயாரிப்பு முறையின் வடிவமைப்பு, அமலாக்கம், நிலையாக்கம் உள்ளிட்ட தங்களது கடமைகளை எவ்வாறு நறைவேற்றுகிறார்கள் என்பதைக் கண்காணிப்பது கணக்காய்வு குழுவின் பொறுப்பாகும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் கணக்காய்வில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மொத்த ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளில், மோசடி அல்லது விவரப் பிழைகள் இல்லாதிருக்கிறதா என்பதற்கு நியாயமான உறுதிப் பெற்று, எங்கள் கருத்தை உள்ளடக்கும் கணக்காய்வாளர்களின் அறிக்கையை வெளியிடுவதே எங்களது குறிக்கோள். நியாயமான உறுதி, உயர் நிலையுள்ள உறுதியாக இருந்தாலும், ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப நடத்தப்படும் கணக்காய்வு, இருக்கக்கூடிய விவரப் பிழைகளை எப்போதும் கண்டுபிடித்துவிடும் என்பதற்கு உத்தரவாதமில்லை. மோசடியால் அல்லது பிழையால் விவரப் பிழைகள் ஏற்படலாம், விவரப் பிழைகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ, இந்த ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கையின் அடிப்படையில் பயன்பார்க்காளர்கள் எடுக்கும் பொருளியல் தீர்மானங்களைப் பாதிக்கக்கூடும் என நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டால், அவை முக்கியமானவையாகக் கருதப்படும்.

ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப நடத்தப்பட்ட கணக்காய்வின் ஒரு பகுதியாக, கணக்காய்வு முழுவதும் நிபுணத்துவ மதிப்பீட்டைப் பயன்படுத்தி, நிபுணத்துவ ஐயவாத்தை நிலைநாட்டினோம். அதோடு நாங்கள்:

- மோசடி அல்லது பிழையால் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் விவரப் பிழைகள் நேரக்கூடிய அபாயத்தை அடையாளம் கண்டு, மதிப்பிட்டு, இந்த இடர்களுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை மேற்கொண்டு எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்குப் போதுமான, பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களைப் பெற வேண்டும். பிழையின் காரணமாக முக்கிய விவகாரங்களில் தவறான அறிக்கையை சமர்பிப்பதால் ஏற்படும் ஆபத்தைவிட, வஞ்சக எண்ணம், ஏமாற்றும் நோக்கம், வேண்டுமென்றே செய்யப்படும் விடுபாடுகள், தவறான தகவல்களை வழங்குதல், உள்கட்டுப்பாட்டை மீறுதல் என மோசடி செய்து தவறான அறிக்கையை சமர்பிப்பது அதிக ஆபத்தானது.
- சூழ்நிலைக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்க கணக்காய்விற்கு தேவையான உள்கட்டுப்பாட்டைப் பற்றி புரிந்துணர்வைப் பெற வேண்டும். ஆயினும், தொகுதியின் உள்கட்டுப்பாட்டின் செயல்திறனைப் பற்றி கருத்துத் தெரிவிப்பது கணக்காய்வின் நோக்கமல்ல.
- பயன்படுத்தப்பட்ட கண்க்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தையும், நிர்வாகம் செய்த கணக்கீட்டு உத்தேசங்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்படுகள் ஆகியவற்றின் நியாயத்தையும் பரிசீலிக்க வேண்டும்.
- தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்க வேண்டும். அதோடு, பெறப்பட்ட கணக்காய்வு ஆதாரத்தின் அடிப்படையில், தொகுதி தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்து குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா, என்பதைத் தீர்மானிக்க வேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால், ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் கணக்காய்வாளர்களின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்க வேண்டும், அல்லது அந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தைத் திருத்தியமைக்க வேண்டும். எங்களது தீர்மானங்கள், கணக்காய்வாளர்களின் அறிக்கை தேதி வரை பெறப்பட்ட கணக்காய்வு, தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை முடிவுக்குக் கொண்டுவரக்கூடும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் படைப்பு மற்றும் வெளிப்பாடுகள் ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப உள்ளனவா என்பதையும், வெளிப்பாடுகள் உட்பட ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த படைப்பு, அமைப்புமுறை, உள்ளடக்கம், ஆகியவற்றையும் நியாயமாகப் படைக்கும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் பிரதிநிதிக்கின்றனவா என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவிக்க நிறுவனங்கள் அல்லது தொழில் நடவடிக்கைகளின் நிதி விவரங்கள் குறித்து போதுமான, பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்கள் பெற வேண்டும். தொகுதியின் கணக்காய்வு முறைக்கும், மேற்பார்வைக்கும், செயல்பாட்டிற்கும் நாங்கள் பொறுப்பாவோம். எங்கள் கணக்காய்வின் கருத்துக்கு நாங்கள் மட்டுமே பொறுப்பாவோம்.

கணக்காய்வில் திட்டமிடப்பட்ட அளவு, நேரம், மற்றும் கணக்காயவின் போது உள்கட்டுப்பாட்டில் நாங்கள் அடையாளம் காணும் நடவடிக்கைகளின் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளிட்ட கணக்காய்வின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இதர விவகாரங்களையும் நாங்கள் கணக்காய்வு குழுவிடம் சமர்பிப்போம்.

சுயேச்சை நடைமுறை தொடர்பான நெறிமுறை நிபந்தனைகளுக்கு நாங்கள் உட்பட்டதாக தெரிவிக்கும் ஆவணத்தையும் கணக்காய்வு குழுவிடம் சமர்பிப்போம், அதோடு, எங்கள் சுதந்திரத்தையும், பொருந்துமாயின் அதைச் சார்ந்த பாதுகாப்புகளையும், பாதிக்கக்கூடும் என நியாயமாகக் கருதப்படும் அனைத்து உறவுமுறைகளையும் இதர விவரங்களையும் அவர்களிடம் தெரியப்படுத்துவோம்.

கணக்காய்வு குழுவிடம் தெரியப்படுத்தும் விவகாரங்களிலிருந்து, நடப்பு காலகட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் கணக்காய்விற்கு மிகவும் முக்கியமான விவகாரங்களை நிர்ணயித்து, முக்கிய கணக்காய்வு விவகாரங்களை அடையாளம் காண்போம். இவ்விவகாரம் குறித்த பொது வெளிப்பாட்டை விலக்கும் சட்டம் அல்லது விதிமுறை இருந்தாலொழிய அல்லது, அரிய சூழ்நிலைகளில், ஒரு விவகாரத்தை வெளியிடுவதால் பொது நலனைவிட அதிக பாதிப்பு நேரக்கூடும் என்று நியாயமான எதிர்ப்பால் விவகாரத்தை எங்கள் அறிக்கையில் வெளியிடக்கூடாது என நாங்கள் நிர்ணயித்தாலொழிய, எங்கள் கணக்காய்வாளர்களின் அறிக்கையில் இவ்விவகாரங்களை நாங்கள் எடுத்துக் கூறியிருப்போம்.

ஜப்பானின் அங்கீகரிக்கப்பட்ட பொது கணக்காளர்கள் சட்டத்தால் வெளிப்படுத்த வேண்டிய ஆர்வங்கள்

ஜப்பானின் அங்கீகரிக்கப்பட்ட பொது கணக்காளர்கள் சட்டத்தின் விதிகளின்படி கணக்காய்வு செய்யபட்ட குழுவின் மீது எங்களுக்கு எவ்வித ஆர்வமும் இல்லை.

KPMG AZSA LLC
டோக்கியோ அலுவலகம், ஜபான்
ஜூன் 20, 2024